மு. க. ஸ்டாலின்.
செயலாளர்,
தி மு க இலைஞர் அணி

பம்பாயில்

டாக்டர் கலைஞர்



வெளியீடு :

பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகம்

திராவிடாகம், பம்பாய்-17

பம்பாய் சண்முகானந்தா கலை அரங்கில் 1978 மே 18ல் நாலரைக் கோடி தமிழ் மக்களின் தளநாயகர், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய சிந்தனைமிகு சீரிய சொற் பொழிவினை வெளியிடுவதில் மெத்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

கழகத் தோழர்களின் நல்லாதரவு கிடைக்கு மாயின் தொடர்ந்து இத்தகைய சொற்பொழிவு களை வெளியிட எண்ணியுள்ளோம்.

அன்பன்

எஸ். தியாகராசன்

செயலாளர்

பம்பாய் தி. மு. க.

திராவிடரகம்

19—10—1981

தி.மு.க. தலைமை நிலையம்
அண்ணா நூலகமும் ஆய்வு மையமும்
சென்னை - 18

மு. க. ஸ்டாலின்,
செயலாளர்,
தி மு க இளைஞர் அணி

சுயாட்சிக் கோரிக்கைக்கு ஆதரவு தாரீர்
மராட்டியத்தில் கழகத் தலைவர் கலைஞர் உரை!

பம்பாய் 18 மே 1978

தங்கள் சொந்த சொத்துக்களை விற்கக்கூட மாநில முதலமைச்சர் டில்லிக்கு அனுமதி பெறச் சென்றால் மாநில சுயாட்சி என்ன ஆவது? இந்தியாவைப் பாதுகாக்க மத்தியில் அதிகாரங்கள். மக்களைப் பாதுகாக்க மக்களுடைய வாழ்வை வளமாக்க மாநிலங்களுக்கு அதிகாரங்கள் என்ற நிலையில்தான் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும் என்று கேட்கிறோம். அதற்கான பிரச்சாரத்தை தி. மு. கழகம் தொடர்ந்து செய்யும். அப்படிப்பட்ட தொடர்ந்த பயணத்திற்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும் என்றென்றும் தேவை என்று கழகத் தலைவர் கலைஞர் மராட்டிய மாநிலத்தின் தலைநகரான பம்பாயில் சண்முகானந்தா மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் கூறினர்.

10370

தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:

G 894.811505
மம்ம

பம்பாயில் தி. மு. கழகத்தின் சார்பாக நடைபெறுகின்ற எழுச்சியும் உணர்ச்சியுமிகுந்த இந்த சிறப்புக் கூட்டத்தில் உங்களனைவரையும் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய நண்பர் பொற்கோ அவர்கள் இங்கே உரையாற்றுகிற நேரத்தில் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நான் இங்கே வந்திருக்கிறேன் என்று குறிப்பிட்டார். இடையில் சில நேரங்களில் நான் இந்த நகரத்திற்கு வேறு பல நிகழ்ச்சிக்காக வந்ததையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொள்ளாமல், குறிப்பாக தி.மு. கழக நிகழ்ச்சிக்கு வந்ததை மாத்திரம் கணக்கிலெடுத்துக் கொண்டு பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வந்திருக்கிறேன் என்று சுட்டிக் காட்டினர்.

நாட்டிலுள்ள அழுக்கை நீக்க உங்கள் துணை நாடுகிறேன் !

பெரும்பாலும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் பம்பாயில் நடைபெறுகின்ற இந்த சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கின்ற காரணத்தால் உங்களுக்குத் தெரியும்; மகாமகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வருமென்பது. புராணீகர் பாஷையில் சொல்ல வேண்டுமேயானுல் மகாமகம் பன்னிரண்டு ஆண்டு களுக்கு ஒருமுறை வருவதைப் போல வந்திருக்கிறேன் என்று சொல்லலாம். ஆனுல், மகாமகம் வருமேயானுல் அது மேலும் சுகாதாரக்கேட்டையும், அழுக்கையும் மக்களுக்கு ஏற்படுத்திவிட்டுச் செல்லும் என்பார்கள். நான் வந்திருப்பது அழுக்கை ஏற்படுத்த அல்ல. நாட் டிலே ஏற்பட்டிருக்கிற அழுக்குகளையெல்லாம் நீக்க என்னையே நம்பிஅல்ல-உங்களையெல்லாம் நம்பி-உங்களத் தனேபேருடைய ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து வந்திருக்கிறேன் என்று கூறுவதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

இந்த நிகழ்ச்சிக்கு நான் வரவேண்டுமென்று நண் பர்கள் பல நேரங்களில் முயற்சித்தாலும் கூட தவிர்க்க முடியாத ஓய்வற்ற பல வேலைகளின் காரணமாக நான் அவர்கள் கூப்பிட்டநேரத்தில் வந்து கலந்துகொள்ள இயலவில்லை. இறுதியாக நமது நண்பர்கள் பம்பா– யிலிருந்து ஒரு படையெடுப்பையே நடத்தி எப்படியும் தேதி தந்தாக வேண்டும் என்று என்னிடம் வலியுறுத்தி இந்த நாளைப் பெற்றுர்கள்.

இந்த நாளைப் பெற்றது மாத்திரமல்ல சிறப்பு, பம்பாயிலிருக்கிற சண்முகானந்தா சபாவில் தி. மு. கழகத்தின் சிறப்புக் கூட்டத்தில் நீங்கள் இந்தத் தேதியில் பேசுகிறீர்கள் என்று என்னிடம் அறிவித்தார்கள். இது மற்றெருரு சிறப்பம்சமாகும்.

சண்முகானந்தா சபை எனக்குப் புதியது அல்ல. சண்முகானந்தா சபையில் தி. மு. கழகத்திற்கு இடம் தந்தது வேண்டுமென்ருல் புதியதாக இருக்கலாம். எனக்கு

இந்த இடம் பழக்கப்பட்ட இடம். நான் பல நிகழ்ச்சி களுக்கு இந்த மேடைக்கு வந்திருக்கிறேன். திரைப்பட நடிகர்களுக்குப் பரிசு வழங்குகிற நிகழ்ச்சியானுலும், தமிழ்ச்சங்க விழா நிகழ்ச்சியானுலும், பம்பாய்த் தமிழர்கள் தமிழ்நாட்டுப் புலவர் குழுவை வரவேற்ற நிகழ்ச்சியானுலும் இப்படிப் பல நிகழ்ச்சிகளுக்கு நான் வந்திருக்கிறேன். ஆனல் இன்றைக்கு வந்திருக்கிற நிகழ்ச்சி முழுக்க முழுக்க அரசியல் நிகழ்ச்சியாகும். இதிலே எனக்கு ஒரு நிறை. நம்முடைய நண்பர்கள் இதை ஒரு சிறப்புக் கூட்டமாக நடத்தி தமிழகத்திலே இருக்கிற கழக வளர்ச்சி நிதிக்கு ரூபாய் பத்தாயிரம் நிதி தருகிறார்களே என்பதில் எனக்கு ஒரு நிறை.

ஆனல் பம்பாயிலுள்ள தமிழ்ச் சகோதரர்களுக்கு உள்ள ஒரு குறை என்னவென்ருல் இதைப் பொதுக் கூட்டமாக நடத்தியிருந்தால் அனைவரும் ஆனையும் பார்த் திருக்கலாம், பேச்சையும் கேட்டிருக்கலாம். அதைக் கெடுத்து அம்பலத்தில் ஆடாமல் இப்படி அறையில் ஆடுகிறார்களே! நியாயந்தானு? என்பது அவர்களுக் குள்ள ஒரு குறை.

இப்போது நான் பத்தாயிரம் ரூபாயைப் பெற்றுக் கொண்ட எனது மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்ற நேரத்தில் வெளியே காத்திருக்கின்ற, இந்த நிகழ்ச்சிக்கு வர இயலாமல் போயிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான தமிழ்ச் சகோதரர்களுக்கெல்லாம் உறுதி கூறிக்கொள்கிறேன். வெகு விரைவில் பம்பாய் நகரத்துக்கு வந்து நீங்கள் விரும்புகின்ற வண்ணம் பொதுக்கூட்ட நிகழ்ச்சியில் நிச்சயமாகக் கலந்துகொள்வேன் என்பதை இப்போதே நான் கூறிக்கொள்கிறேன். நான் நாளையோ நாளை மறுநாளோ ஊருக்குப் போய்விடலாம். இங்கே யிருக் கிற தியாகராசன், பொற்கோ, ஆரியசங்காரன் போன்றவர்கள் உங்களிடம் என்ன பாடுபடுவார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே, அவர்களைக் காப் பாற்ற நான் இப்போது தப்பித்துக்கொள்வதற்காக இதைச் சொல்கிறேன் என்று கருதிக்கொள்ளக் கூடாது. உண்மை யிலேயே உறுதியாகச் சொல்கிறேன். வெகு விரைவில் நான் மீண்டும் பம்பாய் நகரத்துக்கு வந்து பொதுக் கூட்டத்தில் பேசுவேன் என்ற உறுதியை இந்த நிகழ்ச்சி யின் மூலமாக உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மொத்தமாக இந்தச் சிறப்புக் கூட்டத்தில் வசூலாகியிருக்கிற தொகை உள்ளபடியே நான் பெருமிதம கொள்ளக்கூடிய ஒரு தொகையாகும். இந்த நிகழ்ச்சியை நடத்தும் கழக நண்பர்கள் யாரும் சீமான்கள், கோமான்கள், பூமான்களல்ல; மிட்டா மிராசுகளல்ல; பெரிய வணிகத்தை நடத்துகிற அந்தஸ்து உள்ளவர்களல்ல; சாதாரண சாமான்ய நிலையில் உள்ளவர்கள் தான். அவர்களது முயற்சியால் இன்றைக்குக் கிடைத்திருக்கிற தொகை உள்ளபடியே பெருமைபடத்தக்க விதத்தில் உள்ளது. அதாவது முப்பதாயிரம் ரூபாய் இன்று வசூலாகியிருக்கிறது. எனக்கு ரூபாய் பத்தாயிரம் கழக வளர்ச்சி நிதியாகத் தருகிறார்கள் என்ற அளவோடு பெற்றுக்கொண்டு மீதமுள்ள தொகையில் செலவுபோக பாக்கியுள்ள தொகையை பம்பாய் தி. மு. கழகத்திற்கு அவர்கள் வைத்துக்கொள்ளலாம் என்று கழகத் தலைவன் என்ற முறையில் அவர்களை நான் அனுமதித்திருக்கிறேன். நண்பர்கள் அதற்கான கணக்கு வழக்குகளைப் பார்த்து மீதம் எவ்வளவு என்பதை பம்பாய் தி. மு. கழகத்திற்கும், தலைமைக் கழகத்திற்கும் அறிவிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இந்த நேரத்தில் இந்நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டாலும் ஓரிரு ஆண்டுகளாக அல்ல; பல ஆண்டுகளாக பம்பாயிலிருக்கிற தோழர்களைப் பற்றி எனக்கு நல்ல நம்பிக்கை உண்டு. அந்த வகையில் அவர்களைப் பற்றி எனக்குக் கிஞ்சிற்றும் சந்தேகம் கிடையாது. அவர்கள் கழகத்தின் சட்டதிட்டங்களின்படி இந்தக் கழகத்தை பம்பாய் மாநகரத்தில் நடத்திவருகிறார்கள் என்பதைத் தமிழகத்திலிருந்து கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கே வந்து நேரிலும் அறிந்திருக்கிறேன். ஆகவே, அவர்களுக்கெல்லாம் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தி. மு. கழக நண்பர்கள் என்னை வரவேற்று வாழ்த்துக்களை வழங்கினார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் இங்கே மாலைகளை அணிவித்தார்கள். சில நண்பர்கள் வெண் பொற்காசுகளைக் கழக வளர்ச்சி நிதியாகத் தந்தார்கள். மலர்க் கிரீடங்களை அணிவித்தார்கள். பாவம் கிரீடம் இழந்துவிட்டு வந்திருக்கிறானே! இந்த மகுடத்தையாவது அணிந்துகொள் என்று ஆறுதல்

சொல்வதைப்போல் அவர்கள் இங்கே எனக்குக் கிரீடத்தை அணிவித்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மலர்க் கிரீடமும் ஆட்சி மகுடமும்

மலர் மகுடத்தைத் தயாரிப்பதற்காக அவர்கள் செலவிட்ட நேரம், அதற்காக சிந்தித்த நேரம், பூக்கடைக் காரர் எடுத்துக்கொண்ட சிரமம் இவ்வளவுக்கும் ஆன நேரத்தையும் கணக்கிட்டு அது என்னுடைய தலையிலே எவ்வளவு நேரம் தங்கியிருந்தது என்பதையும் கணக் கிட்டுப் பார்த்தால் அதுதான் ஆட்சி மாற்றம் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளலாம்.

எவ்வளவு கஷ்டப்பட்டு தலைக்கு மகுடம் வந்தாலும் அது ஓரிரு நிமிடம்கூடத் தங்காமல் போய்விடுகிறது என்பதை எப்படி மலர்க்கிரீடம் உணர்த்துகிறதோ அதைப் போலத்தான் ஒரு ஆட்சியும்கூட. ஆட்சிப் பொறுப்பிற்கு வருகிறவர்கள் இந்தக் கிரீடம் எள்றென்றும் தங்கள் தலையில் தங்கியிருக்கவேண்டும் என்று நினைத் தால் ஒன்று தலை புண்ணாகிவிடும், இல்லாவிட்டால் மலர் வாடிவிடும். நாமே அதை எடுத்து எறிந்துவிட வேண்டி யிருக்கும். வாடிவிட்ட மலரைப் பெண்கள் வைத்துக் கொள்வதில்லை. அதிலும் ஆண்கள் நிச்சயமாக வைத்துக் கொள்ளமாட்டார்கள். ஆகவே, எடுத்து வீசிவிட நேரிடும். அப்படிப்பட்ட ஒரு நிலைமையில்தான் ஆட்சிகள் வருகின்றன, மாறுகின்றன.

இன்றைக்குச் சிலர் சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி வேடம் போடுகிறார்களே தவிர உண்மையில் அவர்கள் அண்ணாவின் வழியில் நடக்கிறார்களா என்றால் இல்லை.

அண்ணா மாநில சுயாட்சி கேட்டார். இவர்கள் மாநில சுயாட்சிக்கு ஆதரவானவர்களா?

இந்தியாவிலேயே மாநில சுயாட்சி வேண்டுமென்று முதன் முதலாகச் சட்டமன்றத்திலே தீர்மானம் போட்ட கட்சியே திராவிடமுன்னேற்றக் கழகம்தான்.

அன்றைக்கு இந்த விதை முளைக்குமா? முளைத் தாலும் படருமா? படர்ந்தாலும் வளருமா? வளர்ந்

தாலும் வளப்பமாக இருக்குமா? என்றெல்லாம் விஞக்கள் எழுந்தன.

தி. மு. கழகம் தூவிய மாநில சுயாட்சி விதை

அன்று தி. மு. கழகம் தூவிய விதை தான் இன்று மேற்கு வங்கத்தில் பேசப்படுகிறது. பஞ்சாபில் பேசப்படுகிறது. ஏன் தேவராஜ் அர்ஸ் கூடக் கேட்கிறார்.

மத்தியில் இருக்கின்ற அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்க வேண்டுமென்று இவர்களெல்லாம் கேட்கின்ற அளவிற்கு மாநில சுயாட்சிக் கொள்கை இன்றைக்குத் தீவிரம் அடைந்து இருக்கிறது.

ஆனால் இவர்களுடைய நிலை என்ன? அவரவர் களுடைய நிலங்களை விற்கலாமா? கூடாதா? என்று கேட்கக்கூட மொரார்ஜி தேசாயிடம் போகின்றார்கள் என்றால் மாநில சுயாட்சி என்ன ஆவது?

நான் வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. எம். ஜி. ஆர். தன்னுடைய சொந்த சொத்துக்களை விற்பனை செய்யக்கூட ஒரு மாநிலத்தின் முதலமைச்சர் டில்லிக்குச் சென்று அங்கே இருக்கிற பிரதமரின் அனுமதியைப் பெற விரும்புவாராஞல் பிறகு டில்லி ஏன் குதிக்காது? பிறகு டில்லி ஏன் இன்னும் அதிகாரங்களைத் தன்னிடம் வைத்துக்கொள்ள எண்ணுது?

டில்லிக்கும் மற்ற மாநிலத் தலை நகரங்களுக்கும் இருக்கிற வித்தியாசம் என்ன? டில்லியில் இருப்பவர்கள் மற்ற மாநிலங்களுக்கு வந்தால் பெரியவர்களாக ஆகி ரூர்கள். மற்ற மாநில முதலமைச்சர்கள் டில்லிக்குச் சென்றால் சிறியவர்களாக ஆகிறூர்கள்.

ஏற்றத்தாழ்வை அகற்றவே மத்தியில் கூட்டாட்சி

நேற்றைக்கு நானும் என்னுடைய மனைவியும் குழந்தையும் பிளேனட்டோரியம் பார்க்கச் சென்றோம். அங்கே சூரியன், சந்திரன் போன்ற கிரகங்கள் எல்லாம் வைக்கப்பட்டு நம்முடைய எடைகளை அவைகள் குறிக்கும் என்று சொன்னார்கள். என்னுடைய எடை 140

பவுண்டு. நான் சந்திரனிலே போனுல் எவ்வளவு எடை இருக்கும் என்று பார்த்தேன். என்னுடைய எடை சந்திரனில் 17 பவுண்டு இருந்தது. என்னுடைய மனைவி சூரியனிலே போய் நின்று பார்த்தாள். என் மனைவியின் எடை 115 பவுண்டு. சூரியனில் என் மனைவியின் எடை 2 ஆயிரம் பவுண்டாக ஆகிறது. அதைப் போலவே தான் இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறவர்கள் டில்லிக்குப் போனுல் சந்திரனுக்குப் போவதைப் போல எடை குறைகிறது. மத்தியிலே இருக்கிற அமைச்சர்கள் மாநிலங்களுக்கு வந்தால் சூரியனுக்கு போவதைப் போல எடை அதிகமாகிறது. இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது. சமநிலை தேவை. அந்த சமநிலையை உண்டாக்கக்கூடியது மத்தியில் கூட்டாட்சிதான்.

மத்தியில் கூட்டாட்சியை இதே மொரார்ஜி தேசாய் ஒத்துக்கொண்டது கிடையாதா? ஜெயப்பிரகாஷ் நாராயணனுடன் நான் பேசிய நேரங்களில் எல்லாம் மாநிலங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து அளிக்க வேண்டும் என்று அவர் கூறியது கிடையாதா?

நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்றும் மத்தியில் அதிகாரங்கள் குவியக்கூடாது என்றும் மொரார்ஜி தேசாய் பேசியது கிடையாதா?

இன்றைய தினம் அத்தனையையும் மறந்துவிட்டு மாநில சுயஆட்சி கேட்பதே தவறு என்று சொல்வார்களானுல் அதற்கு என்ன பொருள்?

ஆள்பவர்கள் யாரென்பதல்ல!
மாநில சுயாட்சியே நமது லட்சியம்!

நாங்கள் ஆளும் கட்சியாக இருந்து அன்று மாநில சுயாட்சிக் கொள்கையை வற்புறுத்திய பொழுது அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்த அ. தி. மு. க. வினர் "கருணுநிதி ஆட்சியில் இருக்கும் வரை மாநில சுயாட்சி கூடாது" என்று சொன்னுர்கள். ஆனுல் அந்தக் குறுகிய புத்தி எங்களுக்குக் கிடையாது. அங்கே ஆளுகிறவர் எம். ஜி. ஆராக இருந்தாலும், மூப்பனுராக இருந்தாலும் அள

கேசனாக இருந்தாலும், ராமசந்திரனாக இருந்தாலும், கல்யாணசுந்தரமாக இருந்தாலும் சரி, யார் ஆண்டாலும் சரி, தமிழ்நாட்டிலே மட்டும் அல்ல; எல்லா மாநிலங்களுக்கும் மாநில சுயஆட்சி வேண்டும். அதைப்போல் மகாராஷ்டிராவில் எந்தக் காங்கிரஸ் ஆண்டாலும் சரி, கம்யூனிஸ்ட் கட்சி ஆண்டாலும் சரி மாநிலங்களுக்கு மாநில சுய ஆட்சி வேண்டும்.

இந்தியாவைப் பாதுகாக்க மத்தியில் அதிகாரங்கள் மக்களைப் பாதுகாக்க மக்களுடைய வாழ்க்கையை வளமாக்க மாநிலங்களுக்கு அதிகாரங்கள் என்ற நிலையில் தான் அதிகாரங்கள் பரவலாக்கப் பட வேண்டும் என்று கேட்கிறோம். அதற்கான பிரச்சாரத்தை தி. மு. கழகம் தொடர்ந்து செய்யும். அப்படிப்பட்ட தொடர்ந்த பயணத்திற்கு உங்கள் அனைவரின் ஒத்துழைப்பும் என்றென்றும் தேவை என்று கேட்டுக் கொள்கிறேன்.

பம்பாய் சிறப்புக் கூட்டத்தில்
மத்திய அரசுக்குக் கலைஞர் கேள்வி !

தொடர்ந்து தலைவர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:

ஆட்சிப் பொறுப்பில் கிட்டத்தட்ட ஒன்பது ஆண்டுக் காலம் தமிழகத்தில், தி. மு. கழகம் இருந்தது. ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஒன்பது ஆண்டுக் காலம் தான் தி. மு. க. வின் வரலாறு என்று யாராவது கருதினால் அது பெரும் தவறாகும்.

தி.மு.க. வின் வரலாறு 1949-ம் ஆண்டு தொடங்குகிறது என்று யாராவது சொல்வார்களானால், அரசியல் ரீதியாக அது சரியாக இருக்கலாம். ஆனால் தி. மு. கழகத்தின் அடித்தள உணர்வுகளுக்கான வரலாறு தொடங்கி ஏறத்தாழ அறுபது ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது.

தென்னகத்தில் குறிப்பாகத் தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றவும், பிற்பட்ட மக்களை முன்னேற்றவும், கடவுள் பெயரால் அல்லது சாதியின் பெயரால், சம்பிரதாயங்களின் பெயரால், அடித்தளத்தில்

தாழ்த்தப்பட்டுக் கிடந்த மக்களைக் கைதூக்கி விடவும் 1914-ம் ஆண்டு புரட்சித் தீ தமிழகத்தில் கிளம்பியதை வரலாறு படித்தவர்கள் மறந்திருக்க முடியாது.

அன்று கிளம்பிய அந்தப் புரட்சித் தீயின் கனல் தான், தி. மு. கழகம் எனும் அரசியல் சக்தியாக 1949-ம் ஆண்டு அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்டது என் பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

அறுபது ஆண்டுக் கால பாரம்பரியம் கொண்ட இயக்கம் தி. மு. கழகம்

அறுபது ஆண்டுக் கால-ஒரு நீண்ட வரலாற்றுக்கு உட்பட்ட இயக்கம் தான் தி. மு. கழகம். இந்த இயக் கத்தை இந்த உலகத்தில் பல்வேறு பகுதிகளில் பரவிக் கிடக்கின்ற கிட்டத்தட்ட ஏழு கோடித் தமிழர்கள் தங்களது வழிகாட்டியாகக் கருதுகிறார்கள், தங்களுடைய பாதுகாப்பு அரணைக் கொண்டிருக்கிறார்கள். தங்களை வாழ்விக்கக்கூடிய ஒளிவிளக்காக அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

அதனால்தான் இந்தியாவில் ஏற்பட்ட பல்வேறு ஆபத்துக்களை மக்களுக்கு விளக்குகின்ற பொறுப்பினை ஏற்றுக் கொண்ட வரிசையில் முதலிடத்தை தி. மு. கழகம் பெற்றிருக்கிறது என்பதை வரலாறு நிச்சயமாக மறைக்க முடியாது. வரலாற்று ஆசிரியர்கள் மறைக்க முயலலாம்; ஆனால் வரலாறு மறைக்காது. வரலாறு வேறு - வரலாற்று ஆசிரியர்கள் வேறு.

வரலாறும் ஒரு காலத்தில் வரலாற்று ஆசிரியர் களால் மறைக்கப்பட்டு விட்டாலும் கூட, பிறகு எதிர் காலத்தில் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டு, எத்தகைய வரலாறு உலகத்திற்கு மறைக்கப்பட்டது என்று உலகத் திற்கு உணர்த்துகின்ற புதிய மறுமலர்ச்சி ஏற்படத்தான் செய்யும். ஆகவே வரலாறு மறையாது. வரலாற்று ஆசிரியர்கள் இன்றைய தினம் தி. மு. கழகத்தின் செய்திகளை மாத்திரமல்ல—அதனுடைய நடைமுறைகளை மாத்திரமல்ல - கொள்கை கோட்பாடுகளை மாத்திரமல்ல-

தமிழ்நாட்டின் வரலாறுகளைக்கூட இந்திய நாட்டின் வரலாற்றுப் பேராசிரியர்கள் ஒரு காலத்தில் மறைத்துத் தான் எழுதினர்கள்.

இந்தியாவின் வரலாறு எங்கே இருந்து தொடங்க வேண்டுமென்று ஆராய்ச்சி செய்த பேராசிரியர்கள் எல்லாம் – அது காவேரிக் கரையிலிருந்து தொடங்க வேண்டுமென்றுதான் திட்டவட்டமாகக் கூறினர்கள். ஆனால் என்ன காரணத்தாலோ இந்தியாவின் வரலாறு அப்படி எழுதப்படாமல், கங்கையாற்றுக் கரையிலிருந்து எழுதத் தொடங்கினர்கள். தொடங்கியவர்கள் காவிரி ஆற்றுக்கரை வரை எழுதி முடித்திருப்பார்களானால், அதிலே கூடக் குறையில்லை. மகிழ்ச்சியடைந்திருக்கக் கூடும்.

ஆனால், காவேரி வருகிற நேரத்தில் எப்படிக் குடகில் உற்பத்தியாகிய காவேரி—அகண்ட காவேரியாக மாறி—கடைசியாகப் பூம்புகாரில் கடலில் கலக்கிற நேரத்தில் வாய்க்காலாக மாறுகிறதோ—அதைப்போல கங்கைக் கரையிலிருந்து ஆரம்பித்த வரலாறு, காவேரிக்கரையில் முடிகிற நேரத்தில்—'காவேரிக் கரையில் குறுகிய வரலாறுக முடிகிறது. இந்திய நாட்டு வரலாற்றுசிரியர்களால் அப்படி எழுதப்பட்டு விட்டது அதை மாற்றியமைக்க வேண்டுமென்றுதான், "ஆற்றோரம்" என்ற தலைப்பில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேசிய பேரறிஞர் அண்ணா அவர்கள், அது காவேரிக் கரையிலிருந்து எழுதப்பட வேண்டுமென்று சொன்னார்கள்.

சரித்திரச் சிறப்புக்கு உரியவர்கள் நாம்!

ஆகவே, இந்த வரலாற்றுக்குரிய மக்கள் தமிழ் நாட்டு மக்கள்—சரித்திரச் சிறப்புக்குரிய மக்கள் தமிழ் நாட்டு மக்கள்—நாகரிக வளர்ச்சி பற்றி ஆராய்ச்சிக்குழுவினர் ஆராய்ச்சி செய்வதற்குத் தேர்ந்தெடுக்க வேண்டிய பகுதிகள் தமிழ்நாட்டிலுள்ள பல பகுதிகள், அப்படிப்பட்ட சிறப்புமிக்க தமிழ்நாட்டிற்குச் சொந்தக்காரர்களாகிய நாம் இன்று உலகமெங்கெணும் பரவிக்கிடக்கிறோம். என்றாலும், அப்படிப் பரவிக் கிடக்கின்ற இடங்களில் எல்லாம், நாம் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தால் அந்த மாநில மக்களோடு ஒத்துழைத்

தும், பிற தேசங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தால் அந்த தேச அரசோடும், அந்த தேச மக்களோடு ஒத்துழைத்தும் நம்முடைய கடமையை ஆற்றிவர வேண்டுமென்பதே அண்ணு அவர்கள் நமக்கு வழங்கிய அறிவுரையாகும்.

அவர்கள் சிங்கப்பூருக்குச் சென்றிருந்த நேரத்தில் அண்ணு அங்கே உதிர்த்த கருத்தை யாரும் மறந்திருக்க முடியாது. நீங்கள் சிங்கப்பூருக்கு விசுவாசியாக இருங்கள்—மலேசியாவுக்கு விசுவாசியாக இருங்கள்; நீங்கள் தமிழ்மொழிக்குச் சொந்தக்காரர்களாக—தமிழ் நாட்டைத் தாயகமாகக் கொண்டவர்களாக இருந்தாலும் கூட, நீங்கள் வாழுகின்ற இடத்திற்கு நன்றியுள்ளவர்களாக நடந்து கொள்ளவேண்டுமென்று அண்ணு அவர்கள் அங்கே சென்றபோது குறிப்பிட்டார்கள்.

அதையே தான் பம்பாய் நகரத்திலே வாழுகிற தமிழர்களுக்கும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மராட்டிய மண்டலம் இது. எனக்கு முன்னே இங்கு பேசிய நண்பர் பொற்கோ அவர்கள் குறிப்பிட்டதைப் போல, தன்னுடைய நன்றியை ஆற்றுவதற்காக சிவாஜி வளர்த்த நாய்கூடத் தன்னுடைய உயிரைப் பறி கொடுத்தது என்று குறிப்பிட்டார்கள். அத்தகைய நன்றியுள்ள வரலாற்றுக்கு—வீர வரலாற்றுக்குரிய மராட்டிய மண்டலம் இது! இங்கே வாழுகிற தமிழர்கள் சிறுபான்மையினராகவும். மராட்டிய மக்கள் பெரும்பான்மையினராகவும் இருக்கிறார்கள். அப்படிப் பெரும்பான்மையினராக இருப்பதாலேயே சிறுபான்மையினரான மற்றவர்களை ஆட்டிப் படைக்க வேண்டுமென்றோ, ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்றோ நிச்சயமாக நினைக்கக்கூடாது. நினைப்பதும் தவறு. இது மராட்டிய மாநிலத்திற்கு மட்டும் பொருந்துகிற வாதமல்ல; ஒவ்வொரு மாநிலத்திற்கும் பொருந்துகின்ற வாதமாகும்.

பெரும்பான்மை இனத்தவர்களே ஆட்சிப் பொறுப்புக்குரியவர்கள்!

ஒரு மாநிலத்திலே அந்த மாநிலத்திற்குரிய மக்கள் பெரும்பான்மையினராக இருப்பார்களானால் அவர்கள்

தான் அங்கே ஆதிக்கம் செலுத்துகிறவர்களாக இருக்க வேண்டும்; அவர்கள்தான் அங்கே தலைமை வகிப்பவர்களாக இருக்கவேண்டும்; அவர்கள்தான் கட்சிப் பொறுப்பில் பிரதான இடத்தில் இருக்கவேண்டும்; அதே நேரத்தில் மாநிலங்களில் பெரும்பான்மையினராக வாழுகிற மக்கள், அங்கே சிறுபான்மையினராக வாழுபவர்கள் தமிழர்களாக இருந்தாலும், அல்லது மலையாளிகளாக இருந்தாலும் அல்லது தெலுங்கர்களாக இருந்தாலும் அல்லது கன்னடியர்களாக இருந்தாலும், அல்லது குஜராத் மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அல்லது மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—ஒவ்வொரு மாநிலத்திலும் அங்கேயுள்ள பெரும்பான்மையாகவுள்ள மக்களுடைய ஆட்சிதான் இருக்கிறது. அங்கேயுள்ள சிறுப்பான்மையினர்களுடைய நலனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அங்கே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற பெரும்பான்மையினருடைய பிரதிநிதிகளுக்கு நிச்சயமாக இருக்கிறது; இருக்க வேண்டும்; இதுதான் தி.மு.கழகம் நீண்ட நெடுங் காலமாக எடுத்துச் சொல்லி வருகிற கொள்கை. இந்தக் கொள்கையைத் தமிழ்நாட்டு மக்கள் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பது உங்களுக்குத் தெரியும்!

இந்தியாவிலேயுள்ள மாநிலங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்து, இன்று நேற்றல்ல—சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற போதே—காங்கிரஸ் கட்சியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்தக் கருத்து—அது ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்தக் கருத்தைச் சுதந்திரத்திற்குப் பின்னர் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். அதுவரையிலே இன்றைக்கு நாம் 'தமிழ்நாடு' என்று சொல்கிற பகுதி, 'சென்னை மாகாணம்' என்று அழைக்கப்பட்டது. அதிலே ஆந்திரத்தில் சில இடங்களும், கேரளத்தில் சில இடங்களும், கர்னாடகத்தில் சில இடங்களும் சென்னை மாகாணம் என்று இணைந்திருந்த மாநிலமாக இருந்த காரணத்தால், அதற்கு ஆந்திரத்தைச் சேர்ந்த பிரகாசம் அவர்கள் சென்னையின் பிரதமராக இருக்க முடியாது.

அதற்குப் பிறகு ஆந்திரம், தமிழகம், கேரளம், கன்னடம் அதைப் போலவே இந்தியாவில் உள்ள மற்ற வேறு மொழிகளைப் பேசுகிற மாநிலங்கள் மொழி வாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு, அந்தந்த மாநிலத்திற்

குரியவர்கள் தான், அந்தந்த மாநிலங்களை ஆளுவதற்குத் தகுதியுள்ளவர்களாக ஆக்கப்பட்டார்கள் என்பதையும், அதற்கேற்ற வகையில்தான் மக்கள் தங்கள் வாக்குகளை அளித்தார்கள் என்பதையும், யாரும் மறந்து விடுவதற்கில்லை.

உணர்வுள்ளோர் யோசிக்க வேண்டிய முக்கிய பிரச்சினை இது !

ஏன் மக்கள் ஆதரவு அளித்தால் ஒரு மொழிக் குரியவர்கள் இன்னொரு பெரும்பான்மை மொழி பேசுகிற இடத்தில் தலைமை வகிக்கக் கூடாது; அது இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு அடையாளம் அல்லவா என்று கேட்டால் அது சட்டப்படி தவறு அல்ல; ஆனால் உணர்வுகளின்படி அது யோசித்துப்பார்க்க வேண்டிய ஒன்றுகும். உணர்வுள்ளவர்கள் அல்லவா யோசித்துப் பார்க்க வேண்டும்; உணர்வு இல்லாதவர்களைப் பற்றி என்ன கவலை என்று யாராவது கேட்பீர்களானால் நான் அவர்களைப் பற்றிக் கவலைப்படத் தாயராக இல்லை — தயாராக இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தி. மு. கழகம் ஒரு மாநிலக் கட்சி; பிராந்தியக் கட்சி. ஆகவே இப்படிப்பட்ட கொள்கைகளை எடுத்துச் சொல்கிறது என்று சொல்கிற காரணத்தாலேயே அதனுடைய உணர்வுகளைத் தரக்குறைவாகவோ அல்லது — மலிவாகவோ - யாரும் கணக்கிட்டு விடக்கூடாது.

தி. மு. கழகம் மாநிலக் கட்சி தான் ! நான் அதைப் பெருமையோடு ஒத்துக் கொள்கிறேன். சில நேரங்களில் நான் கலந்து கொண்ட அனைத்துக் கட்சிப் பொதுக் கூட்டங்களில் கூட ஜனதாக் கட்சித் தலைவர்களானாலும், வேறு பல கட்சித் தலைவர்களானாலும், அகில இந்தியக் கட்சிக்காரர்கள் எங்களைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார்கள்.

"நீங்கள் அகில இந்தியத் தலைவராக வரவேண்டும்; வர வேண்டியவர். நீ தமிழ்நாட்டோடு அடங்கிக் கிடக்கிறாய்; நீ அகில இந்தியக் கண்ணோட்டத்திற்கு வா!" என்றெல்லாம் எனக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்கள்.

நான் அவர்களுக்கு அதே மேடையில் சொன்ன பதில் என்ன தெரியுமா?

''நான் பூமியிலிருந்து கொண்டே ஆகாயத்தைப் பார்க்க முடியும்'' என்று கருதுகிறவன். ஆகாயத்தைப் பார்ப்பதற்காக ஆகாயத்திற்கே செல்ல வேண்டிய அவசியமில்லை. அதைப் போல தி.மு.க. மாநிலக் கட்சி யாக இருந்து கொண்டே அகில இந்தியப் பிரச்சினைகளைப் பற்றிக் கருத்துக்களைச் சொல்ல முடியும். அகில இந்தியக் கருத்துக்களைச் சொல்வதற்காக நாங்கள் ஒரு அகில இந்தியக் கட்சியாகத்தான் ஆக வேண்டுமென்றால் எந்த நெருக்கடி நிலைக்கும் நாங்கள உட்பட்டவர்கள் அல்ல; நாங்கள் அப்படிக் கட்சியின் பெயரை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. யாருக்கோ நெருக்கடிகள் ஏற்படலாம்; அப்படி ஏற்படுகிற காரணத்தால்—திடீரென்று அவர் களுடைய கட்சிக்கு ''அகில இந்தியா'' என்கிற அடை மொழி வரலாம்!

முரண்பாட்டின் மொத்த உருவம்

''அகில இந்தியா'' என்றால் என்ன அர்த்தம்? அகில இந்தியா என்று போட்டு, பிறகு அதோடு திராவிட மும் கலந்து — ''அகில இந்திய திராவிட'' என்று சொன்னால்—அதைவிட வேறு என்ன முரண்பாடு இருக்க முடியும்?

''திராவிடம்'' என்று தனியாகச் சொல்லி விட்ட பிறகு, 'அகில இந்தியா' என்பதை இணைத்தால் அதை வேறுபாடு என்று கூடச் சொல்ல மாட்டேன்; அது கடைந்தெடுக்கப்பட்ட, வடிக்கப்பட்ட முரண்பாடு என்று தான் சொல்லவேண்டும்!

ஆனால் அப்படி அவர் பெயரை மாற்றிக் கொண்ட நேரத்தில், அவரிடம் சில நிருபர்கள் கேட்டனர்—பெயர் மாற்றியதைப் பார்த்து!

''இப்படிப் பெயரை மாற்றுகிறீர்களே, ''அகில இந்தியா'' என்பது என்ன? ''திராவிடம்'' என்பது என்ன? இது இரண்டும் தனித்தனியல்லவா? இரண்டை யும் ஒன்றுக இணைக்க முடியுமா என்று கேட்டார்கள்''— அந்தத் தலைவரைப் பார்த்து!

அவர் சொன்ன பதில் எனக்குப் பசுமையாக நினைவிலிருக்கிறது. அவரே கூட மறைக்க முடியாத அளவுக்கு, அந்தப் பதில் அவரது கட்சி ஏடுகளில் வெளியிடப்பட்டுமிருக்கிறது!

அவர் சொன்னார்–''இந்தியாவிலே உள்ள அத்தனை பேர்களும் திராவிடர்கள்தான்!''—இப்படிச் சொன்னார்.

உலகத்திலேயே எந்த ஆராய்ச்சியாளர்களும், மாமேதைகளும் சொல்லாத கருத்தை அவர் எடுத்துச் சொன்னார்.

அது ஒரு நெருக்கடியான நேரம். மாநிலக் கட்சிகளை எல்லாம் தடை செய்வார்களோ என்று ஐயப்பட்டிருந்த நேரம். அப்படி தடை செய்யப்பட்டால், அந்தக் கட்சியின் தலைவர்கள், முன்னணிச் செயலாளர்கள், உறுப்பினர்கள் எல்லாம் அத்தனை பேர்களுமே கைது செய்யப்படுவார்கள் என்று அச்சம் இருந்தது.

1975-ஜூன் மாதத்திலிருந்து 76-ம் ஆண்டு வரை ஏறத்தாழ இருபது மாத காலம் நெருக்கடி நிலை இருந்தது. அந்த நேரத்தில் மாநில கட்சியாக இருந்த தி. மு. கழகம் தன்னுடைய பெயரை மாற்றிக் கொள்ளுமோ என்ற மிரட்டல்கள் கூடப் பாய்ந்தன. நாங்கள் இருந்தாலும் தி.மு.க. வாகத்தான் இருப்போம். அழிந்து ஒழிந்தாலும தி. மு. க. வாக தான் ஒழிவோம். ஏனென்றுல் எங்கள் அண்ணன் உருவாக்கிய பெயர் தி. மு. க. அவர் ஏற்றிய கொடி இருவண்ண லட்சியக் கொடி; அவர் தேர்ந்தெடுத்துத் தந்த சின்னம் உதயசூரியன்.

அவர் வகுத்தகொள்கை ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்தே தீருவோம் என்பது. அவர் தந்த லட்சியம் மத்தியிலே கூட்டாட்சி; மாநிலத்தில் சுய ஆட்சி என்பது. அவர் பதிய வைத்த உறுதி இந்தித் திணிப்பை என்றும் எதிர்த்துக் கொண்டே இருப்பது.

அவர் வகுத்த கொள்கை வன்முறையைத் தவிர்த்து வறுமையை வெல்வோம் என்பது. எனவே நாங்கள் அவைகளில் இருந்து எங்களைப் பின்வாங்கிக் கொள்ளத் தயாராக இல்லை என்ற கருத்தை அன்றைக்கே எடுத்து அறிவித்தோம்.

நெருக்கடி காலத்தில் இந்தியாவிலே வேறு எந்தக் கட்சிக்கும் இல்லாத பொறுப்புணர்ச்சி தி. மு. கழகத்திற்கு இருந்தது. வேறு கட்சிகள் பாதிக்கப்படாத அளவுக்கு தி. மு. கழகம் பாதிக்கப்பட்டதா? அல்லவா என்ற கேள்விக்கு நாங்கள் சான்றுகள் அளிக்க வேண்டியது இல்லை. நீங்களே அதற்கு விடைகளாக விளங்கிக்கொண் டிருக்கிறீர்கள். கழகம் ஒன்று தான் அன்றைக்கு அந்தப் பணியைச் செய்ய முடிந்தது. அதற்குக் காரணம் ஏழு மாதகாலம் அது வெளியிலே விட்டு வைக்கப்பட்டிருந்த கட்சியாக இருந்தது.

எப்படி வெளியிலே விட்டு வைக்கப்பட்டிருந்தது என்றால், அது அரசுக் கட்டிலிலே வீற்றிருந்த கட்சியாக இருந்தது. 75-ம் ஆண்டு ஜூன் 25-ம் நாள் இந்திரா காந்தி அம்மையார் அவசர காலச் சட்டத்தைப் பிறப் பித்தார். அவசர காலச் சட்டம் வருவதற்குக் காரணம் அலகாபாத். அம்மையார் பிறந்ததும் அலகாபாத், அவருக்குத் தீர்ப்பு அளிக்கப்பட்டதும் அதே அலகாபாத் தான். அந்த அலாகாபாத் தான் அவசர காலசட்டத் திற்குகுக் காரணமாக அமைந்தது.

அவசர காலச் சட்டத்தின் கொடுமைகளைத் தான் நாங்கள் எதிர்த்தோமே அல்லாமல் தனிப்பட்ட இந்திரா காந்தியை எதிர்த்தோமா என்றால் இல்லை. அவசர காலச் சட்டம் பிற்பிக்கப்பட்ட மறுநாள் எங்களுடைய செயற் குழுவைக் கூட்டி அந்தச் செயற்குழுவில் பெரியதொரு தீர்மானம் எழுதப்பட்டு ஒரே மனதாக செயற்குழு அந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு, அப்படிப்பட்டதொரு தீர்மானத்தை கட்சி ரீதியாக இந்தியாவிலேயே முதன் முதலாக அறிவித்தது தி. மு. கழகம் ஒன்று தான்.

அண்ணாவின் உண்மைத் தம்பிகள் யார்

அப்போதுகூட, இப்போதுள்ள அமைப்புகளை வைத்துக்கொண்டே எந்தெந்தத் தீயசக்திகளை நசுக்க வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களோ அந்தத் தீய சக்திகளை நசுக்க இன்றைக்குள்ள சட்ட திட்டங்களே போதும் என்பதை எல்லாம் அந்தத் தீர்மானத்தில் எடுத்து விளக்கினேம். எந்த முற்போக்குத் திட்டத்திற்கு எந்த

மாநில அரசு தடையாக இருந்தது என்ற கேள்வியை எழுப்பினேன். ஆகவே கைது செய்யப்பட்ட அரசியல் தலைவர்களை எல்லாம் விடுதலை செய்யுங்கள்; பத்திரிகைச் சுதந்திரத்தை மீண்டும் அளியுங்கள்; அவசர காலச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று எடுத்துச் சொன்னேன். இது அண்ணு வழியா? அல்லது அவசரகாலச் சட்டத்தை இந்திரா காந்தி பிறப்பித்தார் என்று கேள்விப்பட்டதும் அவசரம் அவசரமாக ஏதோ போக முடியாத திருமணத்திற்கு வாழ்த்துத் தந்தி அனுப்புவது போல சென்னையில் இருந்து டெல்லிக்கு வாழ்த்துத் தந்தி அனுப்பி உங்களுடைய அவசர காலச் சட்டத்தை நாங்கள் அப்படியே 'ஏ' முதல் "இஸட்" வரை ஒத்துக் கொள்கிறோம்; 'அ' முதல் ஔ வரை அப்படியே ஒத்துக் கொள்கிறோம்; என்று அன்றைக்குத் தந்தி கொடுத்தாரே அது அண்ணு வழியா? இதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அண்ணு வழி என்றால் ஜனநாயக வழி என்று பொருள். ஜனநாயக வழி என்று ஏன் சொல்கிறேன் என்றால், 1966-ம் ஆண்டு டெல்லி மாநிலங்கள் அவையில் அண்ணு அவர்கள் இருந்த பொழுது அப்பொழுது பிரதமராக இருந்த இந்திரா காந்தியை உட்கார வைத்துக் கொண்டு, அப்பொழுது இருந்த வெளிநாட்டு நெருக்கடி நிலையை எதிர்த்து அண்ணு அவர்கள் குரல் கொடுத்தார்கள்.

பிரதமர் அவர்களே! நீங்கள் ஜனநாயகம் பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால் இன்னும் அவசர காலச் சட்டத்தை யுத்தம் முடிந்த பிறகும் நீங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளாமல் அவையின் தடைமுறையை வைத்துக் கொண்டு நீங்கள் ஜனநாயகம் பேசுகிறீர்கள் என்றால், ஜனநாயகம் பற்றிப் பேச இந்தச் சர்க்காருக்கு எந்த விதமான தகுதியும் கிடையாது என்று அண்ணு அவர்கள் பேசினார்கள்.

அண்ணன் அடி பற்றி நெருக்கடி நிலையை எதிர்த்துக் குரல் கொடுத்தோம்!

நாங்கள் 1975-ம் ஆண்டில் எழுப்பிய குரல் '66-ம் ஆண்டில் ராஜ்ய சபையில் அண்ணு அவர்கள் எழுப்பிய

குரலின் அடிஒற்றி வந்த குரலே தவிர தனிக்குரல் அல்ல அந்தக் குரலைத்தான் நாங்கள் எழுப்பினோம். அப்படிப் பட்ட அவசர காலச் சட்டத்தை எடுக்க வேண்டும் என்று நாங்கள் கேட்டது அண்ணா வழியா! அல்லவா என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும்.

அப்படிக் கேட்ட காரணத்தினால் தான் உலகத் தில் உள்ள ஜனநாயகவாதிகள் எல்லாம் எங்களைப் பார்த்து 'இவர்கள் தான் உண்மையான அண்ணாவின் தம்பிகள்' என்று புகழ்ந்து பாராட்டிக் கொண்டிருக் கிறார்கள்

இடையில் வருகிற தேர்தல் வெற்றி தோல்விகள் அல்ல யார் அண்ணாவின் தம்பி? என்பதை நிர்ணயிப்பது அந்தக் கணக்கைப் பார்த்தால் கூட நாங்கள் ஒன்றும் தமிழகத்தில் பட்டுப் போய் விடவில்லை. தமிழகத்தில் அளிக்கப்பட்டிருக்கிற வாக்குக் கணக்கை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு ஆளுகிற கட்சியாக இருக்கிற கட்சி, முஸ்லிம் லீக், பார்வார்டு பிளாக், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, உழைப்பாளர் கட்சி இன்னும் இரண் டொரு உதிரிக் கட்சிகளின் துணையோடு சேர்த்துப் பெற்ற வாக்குகள் 52 லட்சம்.

தி.மு. கழகம் சட்டமன்றத் தேர்தலில் எந்தக் கட்சியின் உதவியும் இல்லாமல் தனியாக நின்று வாங்கிய வாக்குகள் 42 லட்சம். ஆக இரண்டிற்கும் உள்ள இடைவெளி 10 லட்சம் தான்.

அந்த 10 லட்சத்தில் கூட 7 லட்சம் இப்படித் திரும் பினால் அவர் எதிர்க்கட்சித் தலைவர்-நான் முதலமைச்சர்.

ஆக 42 லட்சம் வாக்குகளைத் தனியாக நின்று தி.மு. கழகம் தமிழ் நாட்டில் பெற்றிருக்கிறது என்றால் அது ஒரு சாதாரண விஷயமல்ல. அதுவும் எவ்வளவு பெரிய சோதனைக்குப் பிறகு தி.மு. கழகம் இந்த வாக்குகளைப் பெற்றிருக்கிறது என்பதை உங்களுக்கு விளக்கத் தேவை யில்லை.

1975-ல் அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட நேரத்தில் நாங்கள், 'அது தேவைதான் ஆமாம்' என்று சொல்லி இருந்தால், 'ஜெயப்பிரகாஷ் நாராயணனைக்

கைது செய்தது நியாயம்' என்று சொல்லி இருந்தால், 'மொரார்ஜி தேசாயைக் கைது செய்தது நியாயம்' என்று சொல்லியிருந்தால்; இவையெல்லாம் சரிதான் என்று சொல்லி இருந்தால்; அசோக்மேத்தா கைது செய்யப்பட்ட தானுலும், ஜார்ஜ் பெர்னுண்டஸ் கைது செய்யப்பட்டதானு லும், வாஜ்பாய் கைது செய்யப்பட்டதானுலும் மற்ற அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் கைது செய்யப் பட்டதானுலும் அத்தனையும் நியாயம் தான்– தொழி லாளர்களுக்குப் பணம் கிடையாதா? அருமையான திட்டம்–வரவேற்கிறேம் என்று சொல்லி இருந்தால்– வேலை நிறுத்தமே கூடாது; அப்படித்தான் இருக்க வேண்டும். அதுதான் உரிமை என்றும், இந்திரா காந் திக்கு ஜே என்று போட்டிருந்தால் இப்படிப்பட்ட ஆட்சிக் கவிழ்ப்பு நடைபெற்றிருக்காது. சர்க்காரியா கமிஷன் வந்திருக்காது. ஆக எங்களுக்கு அந்தத் தந்திரங்கள் தெரியவில்லை.

சரணடைந்து வாழ்வதினும் சாவதே மேல்
எனும் பரம்பரை கழகப் பரம்பரை!

அப்படிப்பட்ட தந்திரங்கள் எங்களுக்குத் தெரியா மல் இருக்கவேண்டும் என்று ஆண்டவன் என்று ஒருவன் இருந்தால் அவனைக் கேட்டுக்கொள்கிறேன். சரண் அடைந்து வாழ்வதைவிட கோழையாக இருந்து விட்டுக் கொடுத்து வாழ்வதை விட, லட்சியங்களை விட்டு விட்டு வாழ்வதை விட சாவது மேல்–என்ற தந்தை பெரியாரின் பரம்பரையில்-பேரறிஞர் அண்ணாவின் பரம்பரையில் வந்தவர்கள் நாங்கள். ஆகவேதான் கொள்கையை விட்டுச் செல்ல இயலாது என்று கூறினேம்.

கூறிய நேரத்தில் இந்திரா காந்திக்குத் தர வேண் டிய மதிப்பைக் குறைத்து விட்டோமா என்றால் கிடை யாது சென்னைக் கடற்கரையில் 5 லட்சம் மக்களைக் கூட்டி வைத்துக்கொண்டு குரல் கொடுத்தோம். ஜன நாயகத்தைக் காப்பாற்ற சூளுரை மேற்கொண்டோம். 5 லட்சம் பேர்களும் எழுந்து நில்லுங்கள் என்று சொல்லி சூளுரை மேற்கொண்டார்கள், பிறகு அமைதியாகக் கலைந்து சென்றுர்கள். இது இந்திய நாட்டினுடைய ஜன நாயக வரலாற்றைப் பற்றி எழுதுகிறவர்களுக்கு விட்டு

விட முடியாத குறுக்கீடாகும், சென்னைக் கடற்கரையில் நடந்த அந்த சூளுரை தினக்கூட்டம்.

அந்தக் கூட்டத்தில் பேசும்போதுகூட என்ன சொன்னேன், மோதிலால் நேரு அவர்களின் பேத்தி யாரும், ஜனநாயகச் சிற்பி ஜவகர்லால் நேரு அவர்களின் திருமகளுமான திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் தன்னைச் சூழ்ந்து கொண்டிருப்பவர்களால் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். சமுதாய விரோதிகளை அடக்கவேண்டும் என்றால் எவ்வளவு பெரிய சட்டங்களை வேண்டுமானாலும் அம்மையார் செய்யட்டும். நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம்.

ஆனால் அரசியலில் எதிரிகளை அடக்க, அரசியல் கட்சிகளை ஒழிக்க, இப்படிப்பட்ட முறைகளை இந்திரா காந்தி அம்மையார் பிரதமராக இருந்து செய்யக்கூடாது. இதை காந்திய வழியில், அண்ணா வழியில், அறவழியில் எதிர்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று தான் சொன்னேன்.

அது மாத்திரம் அல்ல. பிறகு இரண்டு தடவை டெல்லிக்குச் சென்ற பொழுது பிரதமரைச் சந்தித்த பொழுது அவர்களிடம் சொன்னேன். அவர்கள் என்னிடம் அவசர காலப் பிரகடனத்தைப் பிறப்பித்ததற்கான காரணங்களை எல்லாம் விளக்கினார்கள். அத்தனையையும் கேட்ட பிறகு சொன்னேன். இப்போது ஒன்றுக் காரியம் முடிந்து விடவில்லை. நான் சென்று ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களைச் சந்திக்கிறேன். அசோக் மேத்தாவோடு பேசுகிறேன். சிறைச்சாலையில் எங்கே இருக்கிறார்களோ அங்கே அனுப்பிவையுங்கள், நான் பேசுகிறேன். ஒரு நல்ல முடிவை எடுக்கலாம் தேவையான முடிவை எடுக்கலாம் என்று சொன்னபோது அம்மையார் சொன்ன வார்த்தை, 'இன்னும் அதற்குக் காலம் கனியவில்லை' என்ற வார்த்தையைத் தான்.

ஆகவேதான் தனிப்பட்ட முறையில் நாங்கள் இந்திரா காந்தியை எதிர்க்கவேண்டும் என்று அல்ல; நாங்கள் இந்திரா காந்தியைவிட, என்னை விட, எங்களை விட, இந்த நாட்டு மக்களைக் காப்பாற்றக்கூடிய ஜனநாயகம் தேவை என்று கருதியவர்கள்.

நெருக்கடி கால நேரத்தில் காமராசர் அவர்களைச் சந்தித்து நீங்கள் எதிர்த்துத் தலைமை வகிக்கத் தயார் என்றால் நாங்கள் ஆட்சியைக் கலைத்துவிட்டு உங்களோடு சேர்ந்து போராடத் தயார் என்று சொன்னேம்.

நெருக்கடி காலத்தில் சுதந்திரக் காற்று வீசியது தமிழகத்தில்தான்!

ஆனால் அவர் தான் இந்தியாவிலேயே ஜனநாயகக் காற்றைச் சுவாசிக்கக்கூடியதாக தமிழ்நாடு இருக்கிறது. அதையும் விட்டுவிடக்கூடாது என்று தடுத்தார். சஞ்சீவ ரெட்டியாரிடமும் கூறினேம். அவரும் அதையே கூறினார். ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களும் அதே தகவலைத்தான் எங்களுக்குச் சொல்லி அனுப்பினார்.

நீங்கள் ராஜினாமா செய்து விட்டால் இந்தியாவிலேயே சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கக்கூடியதாக இருக்கிற இடம் தமிழ்நாடு தான். அதுவும் போய்விடும் என்று சொன்னார்.

இப்போது இவைகள் எல்லாம் அவருக்கு ஞாபகம் இருக்குமோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆனால் எனக்கு நினைவில் நன்றாக இருக்கின்றன. ஆகவேதான் கழக ஆட்சி நீடித்தது.

ஆகவே நாங்கள் ஆட்சியில் இருந்து தமிழ்நாட்டின் மக்கள் அவசர காலச் சட்டத்தின் பாதிப்பை நேரடியாக உணர முடியாத அளவுக்குப் பாதுகாப்புக் கேடயமாக தி. மு. கழக ஆட்சி தமிழகத்திலே இருந்தது.

நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தின் போதுகூட தி.மு.க.வும்–ஜனதா கட்சியும் ஒன்றாக இணைந்து தேர்தல் உடன்பாடு கொள்ளாவிட்டாலும் அன்றைக்குப் போட்டியிட்டன. அப்படி போட்டியிட்ட நேரத்தில், தி.மு.க.வுக்கு ஒரு இடமும் ஜனதா கட்சிக்கு மூன்று இடமும் கிடைத்தன.

அதற்குப் பிறகு சட்டமன்றத் தேர்தல் மூன்றாவது மாத ஆரம்பத்திலேயே வந்து விட்டது. அதற்குள் ஜனதா கட்சித் தலைவர் தன் வாக்கை மாற்றிக் கொண்டு

தி. மு. கழகத்துடன் உடன்பாடு இல்லையென்று அறிவித்து விட்டார்.

நான், பம்பாயில் வாழ்கிறவர்கள் அரசியல் தெளிவு படைத்தவர்கள். உணர்ந்து கொள்வார்கள் என்பதற் காகச் சொல்கிறேன். நாடாளுமன்றத் தேர்தல் நேரத்தில் பிரச்சாரம் செய்த மொரார்ஜி தேசாய் அவர்கள், ஜெகஜீவன்ராம் அவர்கள், இப்போது சட்ட அமைச்சராக உள்ள சாந்திபூஷண் அவர்கள், அசோக்மேத்தா போன்றவர்கள், வீரேந்திர பட்டீல் போன்றவர்கள் அனைவரும் கலந்து கொண்ட மேடையிலே, நானும் கலந்து கொண்டு பேசினேன்.

அப்போது பேசியவர்கள் எல்லாம் என்ன பேசினார் கள், கருணாநிதி மீது போடப்பட்ட சர்க்காரியா கமிஷன் ஆனாலும், தொடரப்பட்ட எந்த வழக்குகள் ஆனாலும், அத்தனையும் அரசியல் நோக்கத்தோடு போடப்பட் டவையே தவிர இவைகளுக்கு எந்தவிதமான அடிப்படை ஆதாரமும் உள்ள வழக்குகள் அல்ல. வெறும் அரசியல் நோக்கம் நிறைந்த வழக்குகள் என்று தான் சொன் னார்கள்.

இன்றைக்கு அவர்கள் அமைச்சர்களாக இருக்கிற நாடாளுமன்றத்தில் தான் சர்க்காரியா கமிஷன் ரிப் போர்ட் வைக்கப்பட்டிருக்கிறது. பரவாயில்லை. நான் அப்படியெல்லாம் செய்தது எங்களை விட்டுவிட வேண்டும் என்று எதிர்பார்த்து அவர்களோடு ஒத்துழைக்கவில்லை.

பெரியார் சொல்லி இருக்கிறார். கைமாறு கருதி கடமையாற்றுகிறவன் தன்னுடைய பணியை ஒழுங் காகச் செய்ய மாட்டான் என்று. அதைப் போல. கைமாறு கருதி நாம் எந்தப் பணியையும் செய்யவில்லை. ஆனால் நாம் கைமாறு கருதாமல் இருக்கலாம். ஆனால் நியாயம் என்றால் அது பொதுவானதாக இருக்க வேண் டும்.

ஒரு கண்ணில் சுண்ணாம்பு
இன்னொரு கண்ணில் வெண்ணெயா?

ஒரு கண்ணில் சுண்ணாம்பு— இன்னொரு கண்ணில் வெண்ணெய் என்பது ஜனதா கட்சியின் நியாயமாக

இருக்கக்கூடாது. அதைத்தான் மதிப்புக்குரிய ஜனதாக் கட்சி நண்பர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பஞ்சாபில் பாதல் மீது இந்திரா காந்தி ஒரு கமிஷன் போட்டார். பாதல் குற்றவாளி என்றும், குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன என்றும் வந்தது. பிறகு அதன் அடிப் படையில் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. நீதிமன்றத்தில் பாதல் குற்றவாளி என்று தண்டிக்கப்பட் டார். தண்டனையை எதிர்த்து, பாதல் உயர்நீதி மன்றத் தில் அப்பீல் செய்து கொண்டார்.

இந்த நேரத்தில் நாடாளுமன்றத் தேர்தல் வந்தது. பிறகு அமைச்சர் ஆனர். இப்போது இந்த நிலவரம்.

பாதல் மீது இந்திரா காந்தியால் போடப்பட்ட கமிஷன் அவரைக் குற்றவாளி என்று சொல்லி இருக்கிறது. அந்த அறிக்கை மீது தொடரப்பட்ட வழக்கிலும் உயர் நீதி மன்றத்தில் அவரைக் குற்றவாளி என்று தண்டித்து இருக்கிறது. தண்டனையில் இருந்து சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டிருக்கிறர். அந்த நேரத்தில் நாடாளுமன்றத் தேர்தல் வருகிறது. பாதல் ஜெயிக்கிறர். அமைச்சர் ஆகிறர்.

இந்த இடைக்காலத்தில் பாதல் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படுகின்றன, ஜனதா சர்க்காரால். நான் கேட்கிறேன் — பாதலுக்கு ஒரு நீதி— இந்தப் பாவி கருணநிதிக்கு ஒரு நீதியா?

ஜார்ஜ் பெர்னண்டஸ் அவர்கள் மீது பயங்கரமான வழக்கு. இன்றைக்கு அவர் மத்திய சர்க்கார் அமைச்சராக இருக்கிறர். பிரபுதாஸ் பட்வாரி, அவர் மீதும் அதே வழக்கு. இன்று அவர் தமிழகத்தில் ஆளுநராக இருக்கிறர்!

ஆனல் எங்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அப்படியே இருக்கின்றன. நான் அவைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்கின்ற அச்சத்தோடு சொல்லவில்லை. அந்த வழக்குகளைச் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கி றோம்.

நியாயம் பேசுகிறவர்கள் மறந்துவிட்டு நியாயம் பேசக்கூடாது !

ஆனால் நியாயம் பேசுகிறவர்கள் தங்களை மறந்து விட்டு நியாயம் பேசக்கூடாது. நேற்று கூட கமலபதி திரிபாதி ராஜ்ய சபாவில் சொல்லி இருக்கிறார். ஷா கமிஷன் ரிப்போர்ட்டைக் குப்பைக் கூடையில் போட வேண்டும் என்று.

நான் கமலபதி திரிபாதி அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். அவர் என்னுடைய நண்பர்தான். அடிக்கடி-முதலமைச்சர்கள் மாநாட்டில் என்னுடைய பக்கத்திலே வந்து உட்கார்ந்து இருக்கிறார். அவரிடம் வெற்றிலை பாக்கு வாங்கிப் போட்டுக் கொள்வேன். அவரைப் பார்த்துக் கேட்கிறேன். ஷா கமிஷன் ரிப்போர்ட்டை மாத்திரம் குப்பைக் கூடையில் போட வேண்டும் என்று சொல்கிற கமலபதி திரிபாதி அவர்களே! நீங்கள் போட்ட சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்டை மாத்திரம் குரோட்டன்ஸ் பெட்டியில் வைக்க வேண்டுமா? என்று தான் நான் அவரைக் கேட்க விரும்புகிறேன்.

நீங்களும் நியாயத்தை உணர வேண்டுமென்றால் ஷா கமிஷன் ரிப்போர்ட் என்ன சொல்கிறது -நெருக்கடி காலத்தில் அத்துமீறிய காரியங்கள் நடைபெற்றன. அதிகாரிகளைக் கொண்டு அதிகாரிகள் மிரட்டப்பட்டார்கள். சாட்சியங்கள் மிரட்டப்பட்டார்கள். அதிக அக்கிரமங்கள் நடைபெற்றன என்று சொல்கின்ற அந்த ஷா கமிஷனுள் அடங்கியது தானே சர்க்காரியா கமிஷனும்.

இந்திரா தான் இந்தியாவின் பிரதமராக இருந்தார். இந்தியா ஒரே நாடு. இந்தியா ஒரே நாடு என்பதை மொரார்ஜி தேசாய் ஒப்புக்கொள்வாராஞல் பஞ்சாபுக்கு ஒரு நீதி — தமிழ் நாட்டிற்கு ஒரு நீதி ஏன் ?

இதிலிருந்து அவர்களாகவே தமிழ்நாட்டைத் தனியாகவே பிரித்துக்கொடுக்க நினைக்கிறார்களா? இதைச் சொல்வதால் தமிழ்நாடு பிரியவேண்டும் என்று கருணாநிதி சொல்கிறான் என்று பாஷை புரியாத பத்திரிகை நிருபர்கள் எழுதி விடக்கூடாது. ஏன் நீதியில் இப்படி முரண்பாடு? நியாயம் வழங்குவதில் வேறுபாடு?

சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட் எந்த அடிப் படையில் வெளி வந்தது? விசாரணை எப்படி நடை பெற்றது? சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என்று கேட்டோம். மறுக்கப்பட்டது. ஆனல் ஷா கமிஷன் அப்படிப்பட்டது அல்ல. யார் வேண்டு மானலும் குறுக்கு விசாரணை செய்து கொள்ளலாம் என்று நீதிபதி ஷா அனுமதி கொடுத்தார்.

ஜனநாயக முறையில் ஷா கமிஷன்
சர்வாதிகாரச் சூழலில் சர்க்காரியா கமிஷன்

ஜனநாயக முறையில் நடைபெற்றது ஷா கமிஷன். சர்வாதிகாரச் சூழ்நிலையில் நடைபெற்றது சர்க்காரியா கமிஷன்.

சர்க்காரியா கமிஷன் வந்ததும் நடவடிக்கை என்று சொல்கிறார்களே - சென்னையில் சிறைச்சாலையில் அடைப் பட்டிருந்த கைதிகளில் (அரசியல்) நூற்றுக்கு மேற்பட்ட வர்கள் அங்கே உள்ள அதிகாரிகளால் நையப்புடைக்கப் பட்டு, சிங்கத் தமிழன் சிட்டிபாபு செத்து, பிணமாக வெளியே வந்தான்.

சாத்தூர் பாலகிருஷ்ணன் உயிரோடு சென்றான். சவமாக வெளியே விட்டார்கள். அந்தக் கொடுமையான நிகழ்ச்சிகள் தொடர்பாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சென்னை சிறையில் சித்தரவதைக்கு ஆளாகி இருக் கிறார்கள். அப்படி ஆனது உண்மையா? அல்லவா? என்று விசாரணை செய்யப்பட்டு அறிய நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும், ஜனதா கட்சி வந்த பிறகு பிரபுதாஸ் பட்வாரி தமிழகத்திற்குக் கவர்னராக வந்த பிறகு, இஸ்மாயில் கமிஷன் என்ற கமிஷன் நியமிக்கப் பட்டு அந்தக் கமிஷன் முறைப்படி விசாரிக்கப்பட வேண்டிய சாட்சிகளை எல்லாம் விசாரித்து அறிக்கையைத் தந்தது.

அந்த அறிக்கை சட்டசபையிலே வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை, சிறையிலே மூன்று பேர்களை அடைக்கப்பட வேண்டிய அறையிலே 12 பேர்களை அடைத்தார்கள். சோற்றுக்குப் பதிலாக அவைகளிலே மணலை அள்ளிப்போட்டு விட்

டார்கள். அதையும் சகித்துக் கொண்டு சாப்பிடஆரம் பித்ததும் அவைகளிலே மூத்திரத்தைக் கலந்துகொடுத் தார்கள்.

இவ்வளவு அக்கிரமங்கள் சிறைச்சாலையிலே நடை பெற்றன. அந்த அதிகாரிகள் மீதெல்லாம் நடவடிக்கை எடுத்தே தீரவேண்டும் என்ற அளவுக்கு இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட் வந்த பிறகும் ஆறு மாத காலமாக அந்த ரிப்போர்ட் தூங்குகிறது.

ஏன்? என்று இன்றைக்கு இருக்கிற கவர்னராவது கேட்டாரா? அல்லது இந்திரா காந்தி மீது இவ்வளவு பெரிய கதைகளைத் தொடுத்துக் கொண்டிருக்கிற, மொரார்ஜி தேசாய்தான் நூறு பேர் சிறைச்சாலையில் அடிபட்ட காரணத்திற்காக அப்படி அடித்த அதிகாரிகள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று எம். ஜி. ஆரைப் பார்த்து கேட்டாரா? என்ன காரணம்? எம். ஜி. ஆரிடத்திலே 19 எம். பி. க்கள் ஓட்டுகள் இருக்கின்றன என்ற ஒரே காரணத்திற்காக மொரார்ஜி தேசாயின் நியாயம் காற்றிலே பறக்கிறது என்றால், ஜனநாயகத்தின் மீது நமக்கு எப்படி நம்பிக்கை ஏற்பட முடியும்?

ஜனநாயகம் என்ற பெயர் மாத்திரம் இருந்தால் போதாது. அது தன்னுடைய இயல்போடு நடைபெற வேண்டும். ஜனநாயகத்திற்கு ஒரு இயல்பு உண்டு. அது பாரபட்சம் பார்க்கக்கூடாது. அது நியாய அநியாயங் களைத் தெரிந்து கொண்டு செயல்படவேண்டும். அங்கே ஒரு நீதி–இங்கே ஒரு நீதி என்று இருக்கக்கூடாது.

இஸ்மாயில் கமிஷன் வேறு யாரும் போட்டதல்ல. பிரபுதாஸ் பட்வாரி, ஜனதா கட்சியின் கவர்னர். அவர் போட்ட கமிஷன், அந்தக் கமிஷன் கூறுகின்ற உண் மைகளை ஆராய்ந்து சட்டசபையிலே எல்லாக் கட்சி யினரும் பேசுகின்றார்கள்.

தி. மு. கழகத்தின், ஜனதா கட்சியின் சார்பில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், ஏன்? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் அத்தனைக் கட்சிகளின் சார்பிலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பேசியாகி விட்டது.

இன்னும் எந்தப் போலீஸ் அதிகாரிகள் -சிறைச்சாலை அதிகாரிகள் மீதும் எந்த நடவடிக்கையும் கிடையாது. ஆனால் வேடிக்கை நண்பர்களே! பல கூட்டங்களில் சொல்லி இருக்கிறேன். இருந்தாலும் மீண்டும் சொல்கிறேன். மதுரையை மீட்டிய சுந்தரபாண்டியன் என்ற படத்தில் அவருடன் நடித்த ஒரு பெண்மணியைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்து விசாரித்தது தவறு என்று போலீஸ் அதிகாரிகள் மீது எம். ஜி. ஆர். நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

அதுபற்றி சட்டசபையில் கேட்டபோது வாக்கு மூலம் அவரே கொடுத்திருக்கிறார். நான் கேட்கிறேன்– ஸ்டேஷனுக்கு அழைத்து வந்து ஒரு பெண்ணை மரியாதையாக விசாரித்ததிற்காக அந்தப் போலீஸ்காரர் மீது நடவடிக்கை எடுக்கிறார் எம். ஜி. ஆர். ஆனால், மறைந்து விட்ட அன்னை மணியம்மையார்-மணியம்மையார் இந்திரா காந்திக்குக் கறுப்புக்கொடி காட்டச் சென்ற போது 'ஏடி வாடி' என்றெல்லாம் போலீசாரால் இழிவாகப் பேசப்பட்டிருக்கிறார். அப்படிப்பட்ட பேசிய அதிகாரிகளுக்கு என்ன தண்டனை தெரியுமா? அந்த அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு? தரப்பட்டிருக்கிறது; இஸ்மாயில் கமிஷன் ரிப்போர்ட்டிற்குக் கேட்க நாதியில்லை.

— கலைஞர் உரை – 18–5–78



தி.மு.க. தலைமைக் கழகம் சென்னை-18.

மு. க. ஸ்டாலின்.
செயலாளர்,
திமுக - இலெமுரியா அணி

WITH BEST COMPLIMENTS FROM

MURUGAN FOUNDRY

Manufacturers of

Ferrous & Non ferrous
Metal Castings
wet Grinding Machine

NARI SEVA SADAN ROAD,
OPP. UNION BANK,
GHATKOPAR, BOMBAY-400 086.

TEL : 67 33 71

With
Best Compliments
From

RAVINDRA TEXTILES

Manufacturers

**POLYESTER SUITINGS
AND SHIRTINGS**

OFFICE :

NO. 10. GANGANATHPRASAD
BUILDING,
FRERE BRIDGE LOW LEVEL,
GRANT ROAD,
BOMBAY-400 007.
Tel. : 36 83 83, 36 32 32

FACTORY :

UNIT NO. 28,
VIRWANI INDUSTRIAL ESTATE,
GOREGAON (EAST),
BOMBAY-400 063.
Phone : 68 49 66

SEVAK PRESS, BOMBAY-400 019